103

103

# NEW ERA GEOGRAPHY

## STANDARD II

MADRAS
18 APR 1945

By

C. SUBRAMANIA MUDALIAR, M. A., L. T.,

*Geography Assistant, Mahajana High School, Erode*

**Revised Edition**

2453

S. R. SUBRAMANIA PILLAI

PUBLISHER :: TIRUNELVELI

**Price: 4 As.**

நவீன

# பூகோள சாஸ்திரம்

## இரண்டாம் வகுப்பு

(1941-ம் வருஷத்தின் ஆரம்பப் பாடசாலைப் பாடத் திட்டத்தை அனுசரித்தது)

2453
910

C. சுப்பிரமணிய முதலியார், M. A., L. T.,
பூகோள ஆசிரியர், மகாஜன ஹைஸ்கூல், ஈரோடு

திருந்திய பதிப்பு

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பிரசுரகர்த்தர்
திருநெல்வேலி ஜங்ஷன்

பதிப்புரிமை] [விலை அணா 4

முதற் பதிப்பு: 1942
திருந்திய பதிப்பு: 1944
மூன்றாம் பதிப்பு: 1945

*Approved by the Text Book Committee, Madras.*
*Vide Page 522 (Part I). Supplement to Part I-B of*
*Fort St. George Gazette, dated 5—12—44.*

ஹீலால் பிரஸ், திருநெல்வேலி

# முன்னுரை

1941-ம் வருஷம் சென்னை கல்வி இலாகா அதிகாரிகள் வெளியிட்டுள்ள ஆரம்பப் பாடசாலைக்குரிய பூகோள பாடத் திட்டங்களை அனுசரித்து இப்புத்தகம் எழுதப் பெற்றுள்ளது.

படங்களைப் பார்ப்பதில் சிறுவர்களுக்கு ஆசையும், ஆத்திரமும் அதிகமென்பது யாவருமறிவர். நேரில் காணமுடியாத விஷயங்களைப் படங்களிலிருந்து விளக்கி, மனதில் பதியவைப்பது சிறந்த நேர் முறை ஆகும். அம்முறையைப் பின்பற்றப் பெரிதும் பயன்படுமாறு இப் புத்தகம் பல படங்களுடன் இயற்றப்பட்டுள்ளது.

பிற நாட்டுச் சிறுவர்கள், நம் நாட்டுச் சிறுவர்கள் இவர்களி[illegible] உடை, உணவு, வாழ்க்கை முதலியவற்றை விளக்கும் படங்[illegible] வேண்டுமளவில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. படங்களை உற்று நோக்[illegible] தம்மில் நின்றும் வேறுபட்ட நடை, உடை, பழக்க வழக்கங்களை உடைய சிறுவர்களின் வாழ்க்கையை எளிதில் அறியும்படி மாணவர்களை ஆசிரியர்கள் தூண்டுவதோடு, விஷயங்களைத் தெளிவாகக் கதை முறையில் விளக்குதல் இன்றியமையாததாகும். அதற்கேற்றவாறு பாடங்கள் செவ்விய முறையில் சிறுவர்களுக்குத் தகுந்த எளிய நடையில் எழுதப் பட்டுள்ளன.

மேலும், தேசப் படங்கள், பத்திரிகைகளில் பிரசுரமாகும் பூகோள சம்பந்தமான படங்கள், பிற சிறந்த புத்தகங்களில் காணும் புகைப் படங்கள் முதலியவற்றையும் ஆசிரியர்கள் சேகரித்து, மாணவர்களுக்குக் காட்டி, அவர்களின் ஊக்கத்தையும், ஆராய்ச்சி ஆற்றலையும், ஆவலையும் எழுப்பவேண்டும். பிள்ளைகளைச் சுற்றுப் புறங்களுக்கு அழைத்துச் சென்று ஆங்காங்கு காணும் காட்சிகள், உணவுப் பொருள்கள், வியாபாரச் சரக்குகள், சுதேச விதேச வஸ்துக்கள் ஆகிய பலவற்றைப் பற்றி விளக்கவும், உபகரணங்கள் சேகரிக்கவும், அட்டவணைகள், காலநிலைக் குறிப்பு முதலியன தயாரிக்கவும் இப் புத்தகம் வழிகாட்டுகிறது. செய்முறை அனுசரித்து, கற்றவை உறம் பெறுமாறு, பாடங்கள் சம்பந்தமாகக் கேள்விகளும், பயிற்சிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தை எழுதுவதிலும், அச்சிடுவதிலும் எனக்குப் பேருதவி புரிந்த ஸ்ரீமான் லெக்ஷ்மி நரஸிம்மய்யர் அவர்களுக்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன்.

ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் இப்புத்தகத்திற்குப் போதிய ஆதரவு அளிக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்.

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | எஸ்கிமோ சிறுவர்கள் - 1 | .... | 5 |
| 2. | எஸ்கிமோ சிறுவர்கள் - 2 | .... | 6 |
| 3. | சஹாரா பாலைவனத்திலுள்ள சிறுவர்கள் - 1 | .... | 7 |
| 4. | சஹாரா பாலைவனத்திலுள்ள சிறுவர்கள் - 2 | .... | 8 |
| 5. | சிவப்பு இந்தியச் சிறுவர்கள் - 1 | .... | 9 |
| 6. | சிவப்பு இந்தியச் சிறுவர்கள் - 2 | .... | 10 |
| 7. | நீக்ரோச் சிறுவர்கள் - 1 | .... | 11 |
| 8. | நீக்ரோச் சிறுவர்கள் - 2 | .... | 12 |
| 9. | இங்கிலாந்து தேசத்துச் சிறுவர்கள் - 1 | .... | 13 |
| 10. | இங்கிலாந்து தேசத்துச் சிறுவர்கள் - 2 | .... | 14 |
| 11. | பல்லாரி இடைப்பையன் - 1 | .... | 15 |
| 12. | பல்லாரி இடைப்பையன் - 2 | .... | 16 |
| 13. | கொச்சியிலுள்ள செம்படவச் சிறுவர்கள் - 1 | .... | 17 |
| 14. | கொச்சியிலுள்ள செம்படவச் சிறுவர்கள் - 2 | .... | 18 |
| 15. | அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத்திலுள்ள சிறுவர்கள் - 1 | .... | 19 |
| 16. | அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத்திலுள்ள சிறுவர்கள் - 2 | .... | 20 |
| 17. | இராஜபுதனத்திலுள்ள சிறுவர்கள் - 1 | .... | 21 |
| 18. | இராஜபுதனத்திலுள்ள சிறுவர்கள் - 2 | .... | 22 |
| 19. | கல்கத்தாவில் வசிக்கும் சிறுவர்கள் - 1 | .... | 23 |
| 20. | கல்கத்தாவில் வசிக்கும் சிறுவர்கள் - 2 | .... | 24 |
| 21. | நமது ஆகாரப் பொருள்கள் | .... | 25 |
| 22. | வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளின் தீவனப் பொருள்கள் | | 26 |
| 23. | நாம் உபயோகிக்கும் வஸ்துக்கள் | .... | 27 |
| 24. | சந்தை | .... | 28 |
| 25. | சாமான்களை எடுத்துச் செல்லும் விதங்கள் - 1 | .... | 29 |
| 26. | சாமான்களை எடுத்துச் செல்லும் விதங்கள் - 2 | .... | 30 |
| | கேள்விகள் | .... | 31 |
| | பயிற்சிகள் | .... | 32 |

# நவீன பூகோள சாஸ்திரம்

## இரண்டாம் வகுப்பு

### 1. எஸ்கிமோ சிறுவர்கள் — 1

பிள்ளைகளே, இந்தப் படத்தைப் பாருங்கள். இதில் காணப்படுபவர்கள் எஸ்கிமோ ஜனங்கள். இவர்கள் வட அமெரிக்காவின் வட பாகத்தில் ஆர்க்டிக் சமுத்திரக்கரையோரமாக வசிக்கிறார்கள். இவர்கள் வசிக்கும் பிரதேசத்தில் குளிர் அதிகம்; தரை பனியால் மூடப்படும். அங்கு மரம், செடிகள் வளர்வது இல்லை.

1. எஸ்கிமோ ஜனங்கள்

இங்குள்ள ஒரு சிறுவனின் பெயர் கூஹாக். அவனும் அவனுடைய பெற்றோர்களும் தோலால் தைக்கப்பட்ட ஆடைகளை அணிகிறார்கள்.



2. ட்யூபிக் எனப்படும் கூடாரம்

கூஹாக் கோடை காலத்தில் கூடாரத்தில் வசிப்பான். அக்கூடாரத்திற்கு ட்யூபிக் என்று பெயர். அது தோலினாலும், கம்புகளினாலும் கட்டப்படும்.



3. இக்லூ என்னும் பனிக்கட்டி வீடு

கூஹாக் குளிர் காலத்தில் பனிக் கட்டிகளால் கட்டப்பட்ட வீட்டில் வசிப்பான். அதற்கு இக்லூ என்று பெயர். அதன் வாசல் ஒடுக்கமாக இருக்கும். ஆகையால் வீட்டிற்குள் போக தரையின் மீது படுத்து ஊர்ந்து செல்லவேண்டும்.

# 2. எஸ்கிமோ சிறுவர்கள் — 2

எஸ்கிமோ ஜனங்கள் கடலில் வாழும் ஸீல் வால்ரஸ் முதலிய பிராணிகளை வேட்டையாடியும், மீன் பிடித்தும் ஜீவிக்கிறார்கள். ஸீலும், வால்ரஸும் அவர்களுக்கு மிகவும் உபயோகப்படுகின்றன. அவர்கள் அப்பிராணிகளின் மாமிசத்தைத்



4. ஸீல்



5. வால்ரஸ்

தின்பார்கள். அவற்றின் தோலால் உடைகள் தைத்துக் கொள்வார்கள்; தோல்களைச் சேர்த்துத் தைத்துக் கூடாரம் போட்டுக்கொள்வார்கள்; எலும்புகளை ஆயுதங்களாக உபயோகிப்பார்கள். ஸீல்களின் கொழுப்பை விளக்கு எரிக்க உபயோகிப்பார்கள்.



6. ஸ்லெட்ஜ் வண்டியை நாய்கள் இழுத்துச் செல்லுதல்

குளிர் காலத்தில் கூஹராக் **ஸ்லெட்ஜ்** எனப்படும் சக்கரமில்லாத வண்டியில் ஏறி வேட்டைக்குப் போவான். அந்த வண்டியை நாய்கள் இழுத்துச் செல்லும்.

கூஹராக் மீன் பிடிக்க ஏறிச் செல்லும் படகு எலும்புகளினாலும், தோலினாலும் கட்டப்பட்டிருக்கும். அப்படகுக்குக் **காயாக்** என்று பெயர்.

7. மீன் பிடிக்கக் காயாக் படகில் செல்லுதல்

## 3. சஹாரா பாலைவனத்திலுள்ள சிறுவர்கள் —1

ஆப்பிரிக்காவின் வட பாகத்தில் ஒரு பெரிய பாலைவனம் இருக்கிறது. அதற்குச் சஹாரா பாலைவனம் என்று பெயர். அப்பிரதேசத்தில் மழை மிகக் குறைவு. பகல் வேளையில் உஷ்ணம் மிகவும் அதிகமாக இருக்கும். இரவு வேளையில் மிகவும் குளிராக இருக்கும்.

8. பாலைவனச் சோலை

சஹாரா பாலைவனத்தில் சில நீரூற்றுக்கள் உண்டு. இவ்வித நீரூற்றுக்களுள்ள இடங்களில் பேரீச்ச மரங்கள் வளர்கின்றன. வயல்களில் சோளம், தினை, பழ வகைகள், காய்கறிச் செடிகள் முதலியன பயிராகின்றன. இவ்விதம் பாலைவனத்தில் செழிப்பாகவுள்ள இடங்களைப் பாலைவனச் சோலைகள் என்பார்கள்.



9. பாலைவனச் சோலையில் வசிப்பவர்கள்

ஒரு பாலைவனச் சோலையில் உமார் என்ற ஒரு சிறுவன் வசிக்கிறான். அவனும் அவனுடைய பெற்றோர்களும் பருத்தி ஆடைகளை அணிகிறார்கள்; குளிரும்பொழுது கம்பளங்களை உபயோகிப்பார்கள்.

உமாரின் தகப்பனர் ஒட்டகங்கள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், குதிரைகள் முதலியவற்றை வளர்க்கிறார்.

உமாருக்கும் அவனுடைய பெற்றோர்களுக்கும் முக்கிய ஆகாரம் பேரீச்சம்பழம். அவர்கள் ரொட்டி செய்து தின்பார்கள். ஆடுகள், ஒட்டகங்கள் இவற்றின் பாலைக் குடிப்பார்கள். ஆட்டு உரோமத்தாலும், ஒட்டகங்களின் உரோமத்தாலும் கம்பளங்கள் நெய்துகொள்வார்கள்.

## 4. சஹாரா பாலைவனத்திலுள்ள சிறுவர்கள் —2



பாலைவனச் சோலையில் ஒரு வீடு

உமார் வசிக்கும் வீடு மண் செங்கல்களால் கட்டப்பட்டது. அவ்வீட்டின் கூரை தட்டையாக இருக்கும். உமாரும் அவனுடைய பெற்றோர்களும் மாலை வேளையில் மேல் மாடியில் உட்கார்ந்து நேரம் போக்குவார்கள்.

சஹாரா பாலைவனத்தில் சிலர் ஒட்டகங்கள், குதிரைகள், ஆடுகள் முதலியவற்றை மேய்த்துக் காலங் கழிக்கிறார்கள். அவர்கள் புல் தரைகளைத் தேடி அடிக்கடி இடம் மாறவேண்டியிருக்கும். ஆகையால் அவர்கள் நிலையாக வீடுகளைக் கட்டிக்கொள்வதில்லை. அவர்கள் கூடாரங்களை அமைத்துக்கொண்டு வசிக்கிறார்கள். கூடாரங்களின் படுதாக்கள் ஒட்டகங்களின் உரோமத்தால் நெய்யப்பட்டிருக்கும்.

சஹாரா பாலைவனத்தில் டுவாரெக் என்னும் ஜாதியார் வசிக்கின்றனர். அவர்கள் பலமுள்ளவர்கள்; அழகாக இருப்பார்கள். தொள தொளப்பான நீண்ட அங்கியை அணிந்துகொள்வார்கள்; முகத்தின் கீழ்ப் பாகத்தை ஒரு துணியால் மூடிக்கொள்வார்கள். அவர்களிடம் கத்தி, வாள், ஈட்டி, கேடயம் முதலிய ஆயுதங்கள் இருக்கும். அவர்கள் அடிக்கடி கொள்ளை அடிப்பது உண்டு.

11. வோரெக்

பாலைவனத்தைக் கடக்க ஒட்டகங்கள் உதவுகின்றன. வியாபாரிகள் ஒட்டகங்களின் மீது சரக்குகளை ஏற்றிக்கொண்டு கூட்டமாகப் போவார்கள். அக்கூட்டத்திற்குக் காரவான் என்று பெயர்.

# 5. சிவப்பு இந்தியச் சிறுவர்கள் – 1

வட அமெரிக்காவின் வட பாகத்தில் ஊசி இலைக் காடுகளும் புல் வெளிகளும் இருக்கின்றன. அங்கு சிவப்பு இந்தியர்கள் என்ற ஜனங்கள் வசிக்கிறார்கள். இவர்கள் தோல் ஆடைகளை அணிவார்கள். ஆடைகளை உருண்டை மணிகளாலும் இறகுகளாலும் அழகு படுத்திக் கொள்வார்கள். இவர்கள் முகத்தில் பல வர்ணங்களைப் பூசிக்கொள்வது உண்டு. புருஷர்கள் தலையில் இறகுகளை அணிவார்கள்.



12. சிவப்பு இந்தியர்

ஆட்டன் என்பவன் ஒரு சிவப்பு இந்தியச் சிறுவன். அவன் புல் வெளிகளில் வசிக்கிறான். அவனுடைய தகப்பனார் சில ஆடுகளையும், மாடுகளையும், குதிரைகளையும் வளர்க்கிறார். ஆட்டன் அவைகளை மேய்த்து வருவான்; சில சமயங்களில் மீன் பிடித்து வருவான். அவனுடைய சகோதரிகள் விறகு, காய்கள், பழங்கள், கீரைகள் முதலியன சேகரித்து வருவார்கள். தகப்பனார் காடுகளில் முயல், மான், லிங்க்ஸ், பைஸன் முதலிய பிராணிகளை வேட்டையாடி வருவார்.

13. லிங்க்ஸ்



14. பைஸன்

மாமிசம், மீன், காய்கள், பழங்கள், பால், வெண்ணெய் முதலியன ஆட்டனுடைய முக்கிய ஆகாரப் பொருள்கள் ஆகும்.

# 6. சிவப்பு இந்தியச் சிறுவர்கள் - 2

ஆட்டன் ஒரு கூடாரத்தில் வசிக்கிறான். சிவப்பு இந்தியர்கள் நான்கு அல்லது ஐந்து கம்புகளைத் தரையில் நட்டு, உச்சிப் பக்கத்தில் அவைகளைச் சேர்த்துக் கட்டுவார்கள். அவற்றின் மீது தோல்களைப் பரப்பிக் கூடாரம் போடுவார்கள். கூடாரத்தின் வெளிப் புறத்தில் பல வர்ணங்கள் கொடுக்கப் பட்டிருக்கும்.



15. சிவப்பு இந்தியரின் கூடாரம்

ஆட்டனுடைய தாயார் சமையல் வேலைகளைக் கவனிப்பாள். அவள் தன் சிறிய குழந்தையைத் தொட்டிலில் வைத்துத் தூங்கச் செய்வாள். அத்தொட்டில் மரப் பட்டைகளால் ஆனது. அதன் உட்புறத்தில் மாஸ் எனப்படும் மிருதுவான பாசி வைக்கப்பட்டிருக்கும். அத் தொட்டிலில் ஒரு கொக்கி உண்டு. குழந்தையைத் தொட்டிலில் வைத்து, கால்களையும் உடம்பையும் ஒரு கம்பளியால் போர்த்திக்கட்டி, தொட்டிலைக் கூடாரத்தின் வெளிப் புறத்திலாவது அல்லது ஒரு மரத்திலாவது தொங்கவிட்டுக் குழந்தையைத் தூங்கச் செய்வதுண்டு. தாயார் வேறு இடங்களுக்குச் செல்லும் பொழுது குழந்தையைத் தொட்டிலுடன் முதுகில் சுமந்துகொண்டு போவாள். சிலர் நாணற்பாய்களைக் கொண்டு செய்யப்பட்ட தொட்டில்களை உபயோகிப்பார்கள்.

16. தொட்டிலில் குழந்தை தூங்குதல்

## 7. நீக்ரோச் சிறுவர்கள் — 1

18 APR 1945

ஆப்பிரிக்காவில் சஹாரா பாலைவனத்திற்குத் தெற்கில் நீக்ரோக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் கறுப்பாக இருப்பார்கள்; இவர்கள் அகன்ற முகமும், சப்பையான மூக்கும், தடித்த உதடும் உடையவர்கள்.



17. நீக்ரோக்கள்

நேகாஸ் என்பவன் ஒரு நீக்ரோச் சிறுவன். அவன் வசிக்கும் பிரதேசம் புல்வெளியானது.

நேகாஸ் வசிக்கும் பிரதேசத்தில் எப்பொழுதும் சூரிய உஷ்ணம் அதிகமாக இருக்கும். ஆகையால் அவனும் அவனுடைய பெற்றோர்களும் அதிகமான ஆடைகளை உபயோகிப்பதில்லை.



18. நீக்ரோச் சிறுவன் வசிக்கும் வீடு

நேகாஸின் வீடு வளையக்கூடிய குச்சிகளாலும், புற்களாலும் கட்டப்பட்டது. வீட்டிற்கு ஜன்னல்கள் கிடையா. ஆகையால் வீட்டிற்குள் இருட்டாகவே இருக்கும்.

நேகாஸின் தகப்பனுருக்கு அநேக மாடுகள் உண்டு. மாடுகளை மேய்ப்பது அவருடைய முக்கிய வேலை. நேகாஸும் மாடுகளை மேய்ப்பான். அவன் முயல், வயல்-எலி, நத்தை, நீர்ப்பாம்பு, பறவைகள் இவைகளைப் பிடித்து வருவதும் உண்டு.

# 8. நீக்ரோச் சிறுவர்கள் — 2

நேகாஸ் வசிக்கும் பிரதேசத்தில் ஒட்டைச்சிவிங்கி, வரிக்குதிரை, சிங்கம், கழுதைப்புலி, மான், யானை முதலிய மிருகங்கள் காணப்படும். நேகாஸின் தகப்பனார் அடிக்கடி மான்களை வேட்டையாடிக் கொண்டு வருவார்.

நீக்ரோக்கள் சில சமயங்களில் சிங்கம், யானை முதலிய மிருகங்களைக்கூட அம்புகள் எய்து கொன்று விடுவார்கள்.



19. வரிக்குதிரை

20. சிங்கம்



21. ஒட்டைச்சிவிங்கி



22. மான்

நேகாஸின் தாயாரும் சகோதரிகளும் வயல்களில் சோளம், தினை, வாழை முதலியவற்றைப் பயிரிடுவார்கள்.

நேகாஸின் தாயார் தானியங்களை மாவாக இடிப்பாள்; கூழ் காய்ச்சுவாள்; ரொட்டி செய்வாள். மாமிசம், கூழ், ரொட்டி, பழங்கள் முதலியன நீக்ரோக்களுக்கு ஆகாரம் ஆகும். இவர்கள் வாழைப் பழங்களைப் பிரியமாகத் தின்பார்கள்.

இக்காலத்தில் நீக்ரோச் சிறுவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். பல நீக்ரோக்கள் உத்தியோகம் செய்கிறார்கள்; வியாபாரம் செய்கிறார்கள்.

# 9. இங்கிலாந்து தேசத்துச் சிறுவர்கள் — 1

இங்கிலாந்து என்று ஒரு தேசம் இருக்கிறது. அங்கு நமது சக்கரவர்த்தி வசிக்கிறார். இங்கிலாந்து தேசத்து ஜனங்களுக்கு ஆங்கிலேயர்கள் என்று பெயர். இங்கிலாந்தில் **மான்செஸ்டர்** என்று ஒரு பட்டணம் இருக்கிறது. அங்குள்ள ஒரு சிறுவனின் பெயர் **ஜேம்ஸ்.**

ஜேம்ஸ் கம்பளிச் சொக்காய், நிஜார், பூட்ஸ் இவைகளை அணிகிறான். தலையில் தொப்பி வைத்துக்கொள்கிறான். அவன் வசிக்கும் பிரதேசத்தில் குளிர் அதிகம். ஆகையால்தான் அவன் கம்பள ஆடைகளை உபயோகிக்கிறான்.



23. ஆங்கிலேயர்

மான்செஸ்டரில் பல பருத்தித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. வேண்டிய பருத்தியை இந்தியா, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து தொழிற்சாலைகளுக்கு வருவித்துக் கொள்கிறார்கள். ஜேம்ஸின் தாயார் ஒரு பருத்தித் தொழிற்சாலையில் வேலைசெய்து வருகிறாள்.

ஜேம்ஸ் வசிக்கும் பிரதேசத்தில் நிலக்கரி அகப்படுகிறது. ஜேம்ஸின் தகப்பனார் ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைசெய்து வருகிறார்.

ஜேம்ஸ் ரொட்டி, இறைச்சி, வெண்ணெய் இவைகளைச் சாப்பிடுவான். உணவுக்கு வேண்டிய பொருள்கள் வெளியிடங்களிலிருந்து வருகின்றன.

ஜேம்ஸ் வசிக்கும் வீடு பெரியது. அது சுண்ணாம்பு, சிமெண்டு இவைகளால் கட்டப்பட்டது. அதில் பல மாடிகள் உண்டு; பல குடும்பத்தார்கள் வசிப்பார்கள்; மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கும். ஜேம்ஸ் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படித்து வருகிறான்.

## 10. இங்கிலாந்து தேசத்துச் சிறுவர்கள் - 2

இங்கிலாந்து தேசத்தில் பல கிராமங்கள் உண்டு. ஒரு கிராமத்தில் ஸ்டோன்ஸ் என்னும் சிறுவன் வசிக்கிறான்.



24. இங்கிலாந்தில் ஒரு கிராமத்திலுள்ள வீடு

ஸ்டோன்ஸ் வசிக்கும் வீடு சிறியது. ஆயினும் அது மிகவும் அழகாக இருக்கும். வீட்டைச் சுற்றிலும் தோட்டம் உண்டு. ஸ்டோன்ஸின் வீட்டில் அநேக கோழிகளையும், வான்கோழிகளையும், ஆடு மாடுகளையும், குதிரைகளையும் வளர்க்கிறார்கள்.

ஸ்டோன்ஸின் தகப்பனாருக்கு வயல்கள் உண்டு. அந்த வயல்களில் கோதுமை பயிராகிறது. குதிரைகள் பூட்டிய இயந்திரங்களைக் கொண்டு பயிரை அறுவடை செய்வார்கள்.

ஸ்டோன்ஸுக்கு கோதுமை, ரொட்டி, இறைச்சி, முட்டை, பால், வெண்ணெய், காய்கறிகள், பழங்கள் முதலியன முக்கிய உணவாகும்.

ஸ்டோன்ஸின் தகப்பனார் காய்கறிகள், பழங்கள், கோழிகள், பால், முட்டை, வெண்ணெய் முதலியவற்றைப் பட்டணங்களுக்குக் கொண்டு போய் விற்பார். சில சமயங்களில் ஸ்டோன்ஸும் தன் தகப்பனாருடன் பட்டணங்களுக்குப் போவான்.

25. காற்றாடி பறக்கவிடுதல்

ஸ்டோன்ஸும் அவனுடைய சகோதரியும் பள்ளிக்கூடத்திற்குச் சென்று படித்து வருகிறார்கள். அவர்கள் மைதானத்தில் காற்றாடி பறக்கவிட்டு விளையாடுவார்கள். குளிர் காலத்தில் சிறுவர்கள் பனிக் கட்டியின்மீது சறுக்கி விளையாடுவார்கள்.

# 11. பல்லாரி இடைப்பையன் — 1

பிள்ளைகளே, நமது தேசத்தின் பெயர் இந்தியா. இது பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் ஒரு பிரிவுக்குச் சென்னை மாகாணம் என்று பெயர். இது இந்தியாவின் தென் பாகத்தில் இருக்கிறது. நாம் சென்னை மாகாணத்தில் வசிக்கிறோம்.

சென்னை மாகாணத்தில் பல்லாரி என்று ஒரு பட்டணம் இருக்கிறது. அப்பட்டணத்தின் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் அப்பாயி என்னும் சிறுவன் வசிக்கிறான். இவன் பேசும் பாஷை தெலுங்கு.



26. பல்லாரி இடையன்

அப்பாயினுடைய தகப்பனுக்கு அநேக ஆடுகள் உண்டு. அப்பாயி அவைகளை மேய்த்து வருவான். அவைகளுக்கு இலை தழைகளைப் பறித்துப் போடுவான்.

அப்பாயி வசிக்கும் பிரதேசம் கற்பாங்கானது. ஆகையால் அவன் வசிக்கும் வீட்டின் சுவர்கள் கற்களால் கட்டப்பட்டுள்ளன. தளம் கருங்கற்களால் போடப்பட்டிருக்கும். கூரை சோளத் தட்டையால் வேயப்பட்டது.

அப்பாயினுடைய தகப்பனுக்குக் கொஞ்சம் நிலங்கள் உண்டு. அவர் அந்த நிலங்களில் பருத்தி, கம்பு, தினை, சோளம் முதலியன பயிரிடுகிறார். பயிர்களுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துப் பாய்ச்சுவார். அவருடைய குடும்பத்தாரும் அவருக்கு உதவியாக வயலில் வேலை செய்வார்கள்.

அப்பாயிக்குக் கம்பு, தினை, சோளம், வெண்ணெய், பால் முதலியன ஆகாரப் பொருள்கள் ஆகும்.

---

# 12. பல்லாரி இடைப்பையன் — 2

அப்பாயினுடைய தகப்பனர் கோடைகாலத்திற்கு முன்னர் ஆடுகளின் உரோமத்தைக் கத்தரிப்பார். ஆட்டு உரோமத்தை வில்களைக்கொண்டு அடித்துச் சுத்தம் செய்வார்.



27. ஆட்டின் உரோமத்தைக் கத்தரித்தல்



28. கம்பளம் நெய்தல்

இரும்புச் சீப்புகளினால் கோதிச் சிக்கு எடுப்பார். இராட்டினத்தில் கம்பள நூல் நூற்பார். தறியில் கம்பளங்கள் நெய்வார். கம்பளங்களை விற்பார்.

பல்லாரியில் இராக்காலங்களில் குளிர் அதிகம். அப்பொழுது அங்குள்ளவர்கள் கம்பளங்களைப் போர்த்திக் கொள்வார்கள். கோடையில் வெயில் அதிகமாக இருக்கும்.



29. கம்பளங்களை விற்கக் கொண்டுபோதல்

அப்பாயினுடைய தகப்பனர் தம் நிலங்களில் விளையும் பருத்தியை பல்லாரிப் பட்டணத்திற்குக் கொண்டு போய் விற்பார். பல்லாரியில் பருத்தி இயந்திர சாலைகள் இருக்கின்றன. அங்கு பருத்தியிலுள்ள பஞ்சையும், விதைகளையும் வேருகப் பிரிப்பார்கள்; பஞ்சைப் பொதிகளாகக் கட்டி இங்கிலாந்து முதலிய தேசங்களுக்கு அனுப்புவார்கள்.

## 13. கொச்சியிலுள்ள செம்படவச் சிறுவர்கள் — 1



30. கொச்சியிலுள்ள செம்படவச் சிறுவன்

சென்னை மாகாணத்தின் மேற்கில் கடலோரமாக கொச்சி என்னும் பட்டணம் இருக்கிறது. அங்குள்ள ஒரு செம்படவச் சிறுவன் பெயர் ராமுன்னி. அவன் பேசும் பாஷை மலையாளம்.

ராமுன்னி அதிகமான உடைகளை அணிவதில்லை.. அவன் இடுப்பில் ஒரு துண்டு மட்டும் கட்டிக்கொள்கிறான். ராமுன்னியின் பெற்றோர்களும் அதிகமான உடைகளை உபயோகிப்பதில்லை.

ராமுன்னி ஒரு குடிசையில் வசிக்கிறான். அவன் வசிக்கும் பிரதேசத்தில் தென்னை மரங்கள் அதிகம். ஆகையால் அவனுடைய வீட்டின் கூரை தென்னங்கீற்றுகளால் போடப்பட்டிருக்கும். கொச்சியில் மழை அதிகம். ஆகையால் வீட்டின் கூரை சரிவாக இருக்கிறது.



31. செம்படவர் குடிசை

ராமுன்னியும் அவனுடைய தகப்பனாரும் கட்டுமரத்தில் ஏறி மீன் பிடிக்கப் போவார்கள். அப்பொழுது தலையில் ஓலைக் குல்லாவை வைத்துக் கொள்வார்கள். ஆதலால் வெயிலில் காய மாட்டார்கள்; மழையில் நனையமாட்டார்கள். அவர்கள் கடலில் வலையை வீசி மீன் பிடிப்பார்கள். மாலையில் வீட்டிற்குத் திரும்புவார்கள்.

ராமுன்னியின் தாயார் மீன்களை விற்பாள். அரிசி முதலிய ஆகாரப் பொருள்களை வாங்குவாள். ராமுன்னிக்கு அரிசி, மீன், தேங்காய் முதலியன உணவாகும்.

# 14. கொச்சியிலுள்ள செம்படவச் சிறுவர்கள் — 2



32. படகு வீடு

கொச்சியில் சில செம்படவச் சிறுவர்கள் படகுகளிலேயே வசிக்கிறார்கள். அவர்கள் தண்ணீருக்குச் சிறிதும் பயப்பட மாட்டார்கள்; தண்ணீரில் மூழ்கியும், நீந்தியும் விளையாடுவார்கள்; நன்றாகப் படகு ஓட்டுவார்கள்.



33. கடற்கரையோரங்களில் வலை கட்டி மீன் பிடித்தல்

செம்படவர்கள் கடற்கரையோரங்களில் வலைகளைக் கட்டுவார்கள்; மீன்களைப் பிடிப்பார்கள்; மீன்களை உலர்த்திப் பக்குவப் படுத்துவார்கள்; வேறு இடங்களுக்கு அனுப்புவார்கள். கடற்கரையோரமாகவுள்ள ஊர்களுக்குக் காயல்கள் வழியாகப் படகுகளில் போக்கு வரவு நடைபெறுகிறது.

கொச்சி மேற்குக் கடற்கரையிலுள்ள ஒரு சிறந்த துறைமுகம். அங்கு கப்பல்கள் வந்து தங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அங்கிருந்து தேங்காய்கள், மரக் கட்டைகள், ரப்பர், காப்பி, தேயிலை, மிளகு, ஏலக்காய் முதலியன ஏற்றுமதியாகின்றன.



34. வெள்ளை யூதர்களின் கோயில்

கொச்சியில் வெள்ளை யூதர்களின் கோயில், மகாராஜாவின் அரண்மனை, கொங்கணிப் பிராமணர்களின் கோயில், துறைமுகம் முதலியன பார்க்கத் தகுந்த இடங்கள் ஆகும்.

# 15. அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத்திலுள்ள சிறுவர்கள் — 1

35. தேயிலைத் தோட்டச்சிறுவன்

இந்தியாவின் வட கிழக்கில் அஸ்ஸாம் என்று ஒரு மாகாணம் இருக்கிறது. அதன் பெரும்பாகம் மலைப்பாங்கானது. அங்குள்ள மலைச் சரிவுகளில் தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன.

ஒரு தேயிலைத் தோட்டத்தில் **லால்** என்ற ஒரு சிறுவன் வசிக்கிறான். லால் வசிக்கும் பிரதேசத்தில் மழை அதிகம். தேயிலைச் செடிகளுக்கு அதிகத் தண்ணீர் வேண்டும். ஆனால் செடிகளின் பக்கங்களில் தண்ணீர் தங்கி நிற்கக் கூடாது.

தேயிலைத் தோட்டங்களில் பல கூலி ஆட்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் சிறு சிறு குடிசைகளில் வசித்து வருகிறார்கள். அக் குடிசைகள் வரிசை வரிசையாக இருக்கும். குடிசைகளின் சுவர்கள் கற்களாலும், மண்ணாலும் கட்டப்பட்டிருக்கும். கூரைகள் மூங்கில்களாலும், மூங்கில் பாய்களாலும் சரிவாகப் போடப்பட்டிருக்கும். லால் ஒரு சிறிய குடிசையில் வசிக்கிறான்.



36. கூலி ஆட்களின் குடிசைகள்

பத்து அல்லது பன்னிரண்டு கூலி ஆட்களுக்கு ஒரு தலைவன் உண்டு. அவனைக் **கங்காணி** என்பார்கள். அவன் தனியான ஒரு வீட்டில் வசிக்கிறான். அவன் சொல்லுகிறபடி கூலி ஆட்கள் வேலை செய்வார்கள்.

37. கங்காணியின் வீடு

## 16. அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத்திலுள்ள சிறுவர்கள் - 2

லால் வசிக்கும் தேயிலைத் தோட்டத்தின் சொந்தக்காரர் ஒரு ஐரோப்பியர். அவர் ஒரு பங்களாவில் வசிக்கிறார்.

லால் தன் தாயாருடனும், சகோதரிகளுடனும் தேயிலை பறிக்கப் போவான். அவர்கள் தேயிலையைப் பறிப்பார்கள்; கூடைகளில் போட்டுக்கொள்வார்கள்; தொழிற்சாலைக்குக் கொண்டு போவார்கள்; கூலி வாங்கிக் கொள்வார்கள். லாலின் தகப்பனார் தோட்டம் கொத்துதல், நிலத்தைப் பண்படுத்துதல் முதலிய வேலைகளைச் செய்துவருவார்.

தேயிலைத் தோட்டத்தில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கு சிறுவர்கள் மாலை நேரத்தில் படிப்பார்கள் லாலும் அங்கு படித்து வருகிறான்.

லாலின் பெற்றோர்கள் சிக்கனமாகச் செலவு செய்வார்கள். அவர்களின் முக்கிய ஆகாரம் சோறும் மீனும் தான். அவர்களுக்கு அதிக ஆடைகள் தேவையில்லை. ஆகையால் செலவு அதிகம் ஆவதில்லை.




38. தேயிலையுள்ள மரப்பெட்டி

தேயிலைத் தோட்டத்தில் தொழிற்சாலைகள் உண்டு. அவைகளில் தேயிலையைப் பக்குவம் பண்ணுவார்கள். அதை மரப் பெட்டிகளில் அடைத்து வேறு இடங்களுக்கு அனுப்புவார்கள். நாம் தேத்தண்ணீர் தயார் செய்து குடிக்கிறோம். முக்கியமாய்க் குளிர்ந்த தேசங்களில் உள்ளவர்கள் அதிகமாகத் தேத் தண்ணீர் குடிப்பார்கள். தேத் தண்ணீர் குடித்தால் சுறு சுறுப்பு உண்டாகும்.

## 17. இராஜபுதனத்திலுள்ள சிறுவர்கள் — 1

இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் இராஜபுதனம் என்னும் பிரதேசம் இருக்கிறது. அங்கு இராஜபுத்திரர்கள் என்பவர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் அழகாகவும், உயரமாகவும் இருப்பார்கள். பல வர்ணங்களாலான ஆடைகளை உடுத்துவார்கள். அங்குள்ள ஒரு சிறுவனின் பெயர் ஜெயசிங்.



39. இராஜபுத்திரர்கள்

இராஜபுதனம் மணல் குன்றுகளும், கற்பாறைகளும் நிறைந்த பிரதேசம். அங்கு மழை குறைவு. அங்கு பல நீரூற்றுக்களும் கிணறுகளும் உண்டு.

ஜெயசிங்கின் தகப்பனாருக்குக் கொஞ்சம் நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் சோளம், கம்பு, தினை, கேழ்வரகு, கோதுமை முதலியன பயிராகின்றன. ஜெயசிங்கும் அவனுடைய பெற்றோர்களும் இத்தானியங்களைச் சமைத்துச் சாப்பிடுவார்கள். அவர்களிடம் அநேக ஆடுகளும், ஒட்டகங்களும் உண்டு. அவற்றின் பாலைக் கறந்து குடிப்பார்கள். அவற்றின் உரோமத்தைக் கத்தரித்துக் கம்பளங்கள் நெய்வார்கள்.

சில சமயங்களில் ஜெயசிங் வசிக்கும் கிராமத்திலுள்ள நீரூற்றிலும் கிணறுகளிலும் தண்ணீர் வற்றிவிடும். அப்பொழுது ஜெயசிங்கும் அவனுடைய பெற்றோர்களும் வேறு இடத்திற்குச் சென்று வசிப்பார்கள். ஆதலால் ஜெயசிங்கின் தகப்பனர் நிலையான வீட்டைக் கட்டிக் கொள்வதில்லை.

இராஜபுதனத்தில் வண்டிகளை இழுக்க ஒட்டகங்களை உபயோகிப்பார்கள். ஜெயசிங் ஒட்டக வண்டியில் பிரயாணம் செய்வான்.

# 18. இராஜபுதனத்திலுள்ள சிறுவர்கள் — 2

40. இராஜபுதனத்தில் ஒரு கோட்டை

இராஜபுதனத்தில் சில அரசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கோட்டைகளில் வசிக்கிறார்கள். அக்கோட்டைகளில் கத்தி, ஈட்டி, கேடயம் முதலிய ஆயுதங்களைக் காணலாம்.

உதயபுரி அரசருடைய அரண்மனைகள் சலவைக் கற்களால் கட்டப்பட்டவை. அவை ஏரிகளின் கரைகளில் உள்ளன. பக்கத்தில் தென்னை, வாழை முதலிய மரங்கள் வளர்ந்து இருக்கின்றன. அவ்விடத்தின் தோற்றம் மிகவும் அழகாக இருக்கும்.

இராஜபுதனத்தில் சலவைக் கற்களால் கட்டப்பட்ட ஒரு அணை இருக்கிறது. அது முற்காலத்தில் ஜெயபுரியை ஆண்டுவந்த அரசரால் கட்டுவிக்கப்பட்டது. இங்கு பலர் சலவைக் கற்களால் பொம்மைகளைச் செய்கிறார்கள். அவைகளை விற்றுப் பணம் சம்பாதிக்கிறார்கள்.

இராஜபுத்திர வீரர்கள் மிகவும் தைரியம் உள்ளவர்கள்; சண்டை செய்வதில் பயப்படமாட்டார்கள்; சண்டையில் பின் வாங்கமாட்டார்கள்.

இராஜபுதனச் சிறுவர்களுக்கு வீரர்களின் கதைகளைக் கேட்பதில் பிரியம் அதிகம். பள்ளிக்கூடங்களில் அவர்களுக்கு வீரம் பொருந்திய கதைகளும், பாட்டுக்களும் கற்பிக்கப்படுகின்றன.

இராஜபுதனத்தின் வடமேற்குப் பாகத்தில் ஒரு பாலைவனம் இருக்கிறது. அதற்குத் தார் பாலைவனம் என்று பெயர். அது சஹாரா பாலைவனத்தைப் போல் அவ்வளவு பெரியது அல்ல.

41. இராஜபுத்திர வீரன்

# 19. கல்கத்தாவில் வசிக்கும் சிறுவர்கள் — 1

வட இந்தியாவில் கங்கை நதி பாய்கிறது. அது பல நதிகளாகப் பிரிந்து கடலில் கலக்கிறது. ஒரு கிளை நதியின் பெயர் ஹூக்ளி. அதன் கரையில் கல்கத்தா என்னும் நகரம் இருக்கிறது. கல்கத்தா இந்தியாவிலுள்ள பட்டணங்களில் பெரியது. இங்கு கோடை காலத்தில் அதிக மழை பெய்யும்.



42. கல்கத்தா வாசிகள்

கல்கத்தாவில் அரவிந்தகோஷ் என்னும் சிறுவன் வசிக்கிறான். அவன் வங்காளி பாஷை பேசுகிறான்; பள்ளிக்கூடத்தில் படித்து வருகிறான். அவனும் அவனுடைய பெற்றோர்களும் வெள்ளை நிற உடைகளை அணிகிறார்கள். அவர்கள் ஒரு பெரிய மாடி வீட்டில் வசிக்கிறார்கள்.

கல்கத்தாவில் பல பெரிய கட்டடங்கள் காணப்படும். அங்கு பல பெரிய ஆபீசுகள், கடைகள், தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கு பருத்தி, சணல், இரும்பு, காகிதம், பென்சில், சோப்பு சம்பந்தமான வேலைகள் நடக்கும் தொழிற்சாலைகள் உண்டு.

கல்கத்தாவில் மிருகக் காட்சிசாலை, பொருட் காட்சி சாலை, சிங்காரத் தோட்டம், ஜெயினர்களின் கண்ணாடிக் கோயில் முதலியன பார்க்கத் தகுந்த சில இடங்கள் ஆகும். தெருக்களில் டிராம் வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் ஓடிக்கொண்டு இருக்கும். இப்பட்டணத்தில் பல இருப்புப் பாதைகள் கூடுகின்றன; பல தண்ணீர் மார்க்கங்களும் கூடுகின்றன. கல்கத்தா துறைமுகத்திலிருந்து சணல், தேயிலை முதலியன ஏற்றுமதியாகின்றன.

# 20. கல்கத்தாவில் வசிக்கும் சிறுவர்கள் — 2

அரவிந்தகோஷின் தகப்பனர் ஒரு சணல் தொழிற்சாலையில் வேலை செய்கிறார். அங்கு சணல் நாரைக்கொண்டு கோணிப்பைகள், கயிறுகள், கித்தான்கள் முதலியன செய்கிறார்கள்.



43. சணல் நாரால் செய்யப்பட்ட கோணிப்பை, கயிறு, கித்தான்

கல்கத்தாவின் சுற்றுப் பிரதேசத்தில் நெல் விளைவு அதிகம். ஆதலால் அங்குள்ளவர்களின் முக்கிய உணவுப் பொருள் அரிசி. அவர்கள் தேத்தண்ணீர் அதிகம் குடிப்பார்கள்.

கல்கத்தாவின் சுற்றுப்புறத்தில் வசிக்கும் குடியானவர்கள் சிறிய வீடுகளில் வசிக்கிறார்கள். அவை பெரும்பாலும் கூரை வீடுகள்; மண் திட்டுகளின் மீது கட்டப்பட்டிருக்கும்.



44. கல்கத்தா சுற்றுப்புறவாசிகள்

குடியானவர்கள் விவசாய வேலைகளுக்காக மாடுகளை வளர்க்கிறார்கள். வயல்களில் நெல், சணல், புகையிலை முதலியவற்றைப் பயிரிடுகிறார்கள்.

கிராமவாசிகள் தங்கள் கிராமங்களில் கிடைக்காத சாமான்களைக் கல்கத்தாவுக்குச் சென்று வாங்கிக் கொள்வார்கள். கிராமவாசிகளில் பலர் தங்கள் வயல்களில் அறுவடையானதும் கல்கத்தாவுக்குச் சென்று அங்குள்ள தொழிற்சாலைகளில் வேலைசெய்வதும் உண்டு. கிராமங்களிலுள்ள பிள்ளைகள் கிராமப் பள்ளிக்கூடங்களில் படித்து வருவார்கள். அவர்கள் பெரியோரிடம் மரியாதையாக நடந்துகொள்வார்கள்.

## 21. நமது ஆகாரப் பொருள்கள்

நாம் பல பொருள்களை நமது உணவுக்கு உபயோகிக்கிறோம். அவைகளைக் கீழ்க்கண்டபடி பிரிக்கலாம்:

**தானியங்கள்:** நெல், சோளம், தினை, கம்பு, கேழ்வரகு, கோதுமை முதலியன.

**பருப்பு வகைகள்:** துவரை, உளுந்து, கடலை, மொச்சை முதலியன.

**காய்கள்:** வாழைக்காய், கத்தரிக்காய், வெண்டைக்காய், புடலங்காய், பாகற்காய், அவரைக்காய், பீர்க்கங்காய், பூசணிக்காய், பறங்கிக்காய், பலாக்காய், முருங்கைக்காய், தேங்காய், மாங்காய், நார்த்தங்காய், பேரிக்காய், வெள்ளரிக்காய் முதலியன.

**பழங்கள்:** வாழைப் பழம், மாம்பழம், ஆரஞ்சு, அன்னாசு, மாதுளை, கொய்யா, திராக்ஷை, எலுமிச்சை, ஆப்பிள் முதலியன.

**கிழங்குகள்:** சிறுகிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, உருளைக் கிழங்கு, சேம்பு, கருணை, சேனை, முள்ளங்கி முதலியன.

**கீரைகள்:** அரைக்கீரை, தண்டுக்கீரை, கொத்தமல்லி, கறிவேப்பிலை, அகத்தி, முட்டைகோஸ், முருங்கை முதலியன.

**மற்றப் பொருள்கள்:** கடுகு, மிளகு, சீரகம், எள்ளு, வேர்க்கடலை, இஞ்சி, மஞ்சள், மிளகாய், பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, காப்பி, தேயிலை முதலியன.

உங்கள் உணவுக்கு உபயோகப்படும் பொருள்களின் பெயர்களை எழுதி ஒரு அட்டவணை தயார் செய்யுங்கள்.

# 22. வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளின் தீவனப் பொருள்கள்

வீடுகளில் வளர்க்கப்படும் சில பிராணிகளைச் சொல்லுங்கள். அவை எவ்விதம் நமக்கு உபயோகப்படுகின்றன? அவைகளின் தீவனப் பொருள்கள் என்ன?

| வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகள் | | தீவனப் பொருள்கள் |
|---|---|---|
| | பசு, எருது, எருமை | வைக்கோல், புல், சோளத்தட்டை, கம்பந்தட்டை, பருத்திக்கொட்டை, தவிடு, எள்ளுப் பிண்ணாக்கு, தேங்காய்ப் பிண்ணாக்கு. |
| | ஆடுகள் | புல், தழை. |
| | குதிரை | புல், கொள்ளு. |
| | நாய் | மாமிசம், பால், சோறு. |
|  | பூனை | எலி, சிறிய பறவைகள், பால், சோறு. |
| | கோழிகள் | தானியங்கள், குருணை, அரிசி, புழு, பூச்சி. |

சில தீவனப் பொருள்கள் உள்ளூர் பயிர்களிலிருந்து கிடைக்கின்றன. சில தீவனப் பொருள்கள் அயலூர் பயிர்களிலிருந்து கிடைக்கின்றன. சாதாரணமாக நெல் பயிராகும் இடங்களில் மாடுகளுக்கு வைக்கோல் முக்கிய தீவனம் ஆகும். சோளம், கம்பு விளையும் இடங்களில் மாடுகளுக்கு சோளத்தட்டை, கம்பந்தட்டை இவைகளைத் தீவனமாகப் போடுவார்கள். நாற்றுச்சோளம் என்பதை மாடுகளின் தீவனத்திற்காகவே சில இடங்களில் பயிரிடுகிறார்கள்.

## 23. நாம் உபயோகிக்கும் வஸ்துக்கள்

பிள்ளைகளே, நீங்கள் படிக்கவும், எழுதவும் உபயோகிக்கும் பொருள்களின் பெயர்களைச் சொல்லுங்கள். உங்கள் வீடுகளில் என்னென்ன பொருள்களை உபயோகிக்கிறார்கள்? தோட்ட வேலைக்கு வேண்டிய சாமான்கள் யாவை? படத்தில் காணப்படும் சாமான்களின் பெயர்களைச் சொல்லுங்கள்.



45. வீட்டுச் சாமான்கள்



46. மோட்டார்

நாம் உபயோகிக்கும் சாமான்களில் சில உள்ளூரில் செய்யப்படுகின்றன; சில அயல் இடங்களில் செய்யப்படுகின்றன.

உள்ளூரில் குயவன் மண் பாண்டங்கள் செய்கிறான். அதற்கு வேண்டிய மூலப் பொருள் மண். அது உள்ளூரில் கிடைக்கிறது.

உள்ளூரில் தச்சன் வண்டி, பெஞ்சு, நாற்காலி முதலிய மரச்சாமான்கள் செய்கிறான். அதற்கு வேண்டிய மூலப் பொருள் மரம். அது நம் நாட்டில் கிடைக்கிறது.

உள்ளூரில் கொல்லன் அரிவாள் செய்கிறான். அதற்கு வேண்டிய மூலப்பொருள் இரும்பு. அது அயல் இடத்திலிருந்து வருகிறது.

ஹரிகேன் விளக்கு, சைக்கிள், மோட்டார் இவைகள் உள்ளூரில் செய்யப்படவில்லை. அவை அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளிலிருந்து வருகின்றன.



47. சைக்கிள்

# 24. சந்தை

சில ஊர்களில் சந்தை கூடும். அது குறிப்பிட்ட தினங்களில் கூடும். உங்கள் ஊரில் சந்தை கூடுகிறதா? எந்தத் தினத்தில் கூடுகிறது?



48. சந்தை

சந்தையில் தானியங்கள், காய்கறி வகைகள், பழ வகைகள், துணிகள், மணபாண்டங்கள், சட்டிகள், ஓலைப் பாய்கள், பெட்டிகள் முதலியன விற்கப்படும். இவற்றுள் சில உள்ளூரில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்கும். சில அயல் ஊர்களிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கும்.

சந்தை பெரிய மைதானத்தில் கூடும். சந்தை கூடுமிடத்தைச் சுற்றிலும் சுவர் அல்லது வேலி இருக்கும். சரக்குகளை வைத்துக்கொள்ள ஆங்காங்கு கடைகள் அமைக்கப்பட்டிருக்கும்.

வியாபாரிகள் தலைச் சுமையாகவும், வண்டிகளிலும் சரக்குகளைக் கொண்டுவருவார்கள். குறிப்பிட்ட கட்டணம் கொடுத்து சந்தைக்குள் போவார்கள். சந்தையில் கூட்டம் அதிகமாக இருக்கும்; சத்தம் காதை அடைக்கும்.

சந்தைகளில் விற்கப்படும் சாமான்களின் விலை மலிவாக இருக்கும். ஆகையால் பலர் தங்களுக்கு அந்தந்த வாரத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் மற்றும் வேண்டிய துணிகளையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் வாங்கிக்கொள்வார்கள்.

பட்டணங்களில் தினசரி நடைபெறும் சந்தை உண்டு. அதற்கு மார்க்கெட்டு என்று பெயர். சில ஊர்களில் குறிப்பிட்ட காலங்களில் மாட்டுச் சந்தை கூடுவது உண்டு.

# 25. சாமான்களை எடுத்துச்செல்லும் விதங்கள் - 1

சாமான்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பல விதங்களில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

காய்கறிக் கூடை, தயிர்ப் பானை, ஜவுளி மூட்டை, அரிசி மூட்டை, வைக்கோல் கட்டு, விறகுக் கட்டு இவைகளைத் தலைச் சுமையாகச் சுமந்து செல்லுகிறார்கள்.



49. பொதி மாடு

சில இடங்களில் கழுதைகளின் மீது விறகுக் கட்டுகளை ஏற்றிக்கொண்டு போவார்கள். அதுபோல மாடுகளின் மீது பொதி ஏற்றிக்கொண்டு போவதும் உண்டு.

நெல் மூட்டைகள், பஞ்சுப் பொதிகள், வைக்கோல் முதலியவற்றைக் கட்டை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். இக்காலத்தில் வியாபாரச் சரக்குகளை எடுத்துச் செல்ல மோட்டார் லாரிகளையும் உபயோகிக்கிறார்கள். லாரிகளின் மூலம் காலதாமதம் இல்லாமல் இடத்துக்கு இடம் சரக்குகளைக் கொண்டு போக முடியும்.



50. மோட்டார் லாரி

அதிக தூரத்திலுள்ள இடங்களுக்கு ரெயில் வண்டிகள் மூலம் சாமான்களை அனுப்புகிறார்கள். சாமான்களை மட்டும் எடுத்துச் செல்லும் ரெயில் வண்டிகளை குட்ஸ் வண்டிகள் என்பார்கள்.



51. ரெயில் வண்டி

சில ஆறுகளிலும், கால்வாய்களிலும் படகுகள், பரிசல்கள் செல்லக்கூடும். அவற்றில் சாமான்களைக் கொண்டு போகலாம். கப்பல்களில் சரக்குகளை ஏற்றிக் கடலைக் கடந்து செல்லுகிறார்கள்.



52. படகு



53. கப்பல்

# 26. சாமான்களை எடுத்துச்செல்லும் விதங்கள் - 2

எஸ்கிமோ ஜனங்கள் சாமான்களை ஸ்லெட்ஜ் வண்டியில் ஏற்றிக்கொண்டு போகிறார்கள். அந்த வண்டிகளுக்குச் சக்கரங்கள் இல்லை. அந்த வண்டிகளை நாய்கள் இழுத்துச் செல்லுகின்றன.

54. ஸ்லெட்ஜ் வண்டி

சஹாரா பாலைவனத்தில் ஒட்டகங்களின் மீது சரக்குகளை ஏற்றிக்கொண்டு போகிறார்கள். இராஜபுதனத்தில் ஒட்டகங்கள் பூட்டிய வண்டிகளை உபயோகிக்கிறார்கள்.



55. ஒட்டகங்களின் மீது சாமான்களை ஏற்றிக்கொண்டு போதல்

சிவப்பு இந்தியர்கள் இடம் மாறும் பொழுது சாமான்களை எடுத்துச் செல்ல, தற்காலத்தில் குதிரைகளை உபயோகிக்கிறார்கள். அவர்கள் கூடாரம் போட உபயோகிக்கும் கம்புகளை ஒரு விதமாகச் சேர்த்துக் கட்டி அவற்றின் மீது சாமான்களை ஏற்றுவார்கள். குதிரைகள் அவைகளை இழுத்துச் செல்லும். சாமான்கள் ஏற்றப்படும் இடத்தில் தொட்டிலுடன் குழந்தையை வைத்துக் கொண்டு போவார்கள்.



56. சிவப்பு இந்தியர் சாமான்களை எடுத்துச் செல்லும் விதம்

அஸ்ஸாம் தேயிலைத் தோட்டங்களில் மின்சாரம் செல்லும் கம்பிகளில் ஒரு விதமான கூண்டுகளைத் தொங்க விட்டிருப்பார்கள். அந்தக் கூண்டுகளில் தேயிலைகளைப் போட்டு தொழிற்சாலைக்கு அனுப்புகிறார்கள்.

# கேள்விகள்

**பாடங்கள் 1, 2.** 1. எஸ்கிமோ சிறுவர்கள் வசிக்கும் பிரதேசத்தில் குளிர்காலம் எவ்விதம் இருக்கும்? 2. அங்கு வசிக்கும் இரண்டு பிராணிகளைச் சொல்லு. 3. எஸ்கிமோக்களின் ஆகாரம் என்ன?

**பாடங்கள் 3, 4.** 1. ஸஹாராப் பாலைவனம் எங்கு இருக்கிறது? 2. பாலைவனச் சோலைகளில் என்ன மரங்கள் வளர்கின்றன? 3. பெடூரெக் ஜாதியார் எவ்விதமான உடைகளை அணிகிறார்கள்?

**பாடங்கள் 5, 6.** 1. சிவப்பு இந்தியர்கள் எங்கு வசிக்கிறார்கள்? 2. சிவப்பு இந்தியர் வேட்டையாடும் பிராணிகள் எவை? 3. சிவப்பு இந்தியக் குழந்தையின் தொட்டில் எவ்விதம் இருக்கும்?

**பாடங்கள் 7, 8.** 1. நீக்ரோக்கள் பார்வைக்கு எவ்விதம் இருப்பார்கள்? 2. நீக்ரோவின் வீடு எவ்விதம் இருக்கும்?

**பாடங்கள் 9, 10.** 1. ஜேம்ஸ் என்ற ஆங்கிலேயச் சிறுவன் எவ்விதமான உடைகளை அணிகிறான்? 2. இங்கிலாந்து தேசத்தில் ஸ்டோன்ஸ் வசிக்கும் வீடு எவ்விதமானது?

**பாடங்கள் 11, 12.** 1. பல்லாரி இடைப்பையன் என்ன பாஷை பேசுகிறான்? 2. அவன் என்ன வேலை செய்துவருகிறான்? 3. அவனுடைய தகப்பனார் வயல்களில் என்ன பயிரிடுகிறார்? 4. ஆட்டு உரோமத்தைக்கொண்டு என்ன செய்வார்கள்?

**பாடங்கள் 13, 14.** 1. கொச்சியிலுள்ள செம்படவச் சிறுவர்கள் எவ்விதம் மீன் பிடிப்பார்கள்? 2. அவர்கள் எவ்விதமான வீடுகளில் வசிக்கிறார்கள்? 3. அவர்களின் ஆகாரப் பொருள்கள் எவை? 4. கொச்சியில் பார்க்கத் தகுந்த இடங்கள் எவை?

**பாடங்கள் 15, 16.** 1. அஸ்ஸாம் மலைச் சரிவுகளில் என்ன பயிரிடுகிறார்கள்? 2. தேயிலைத் தோட்டங்களில் கூலி ஆட்கள் எவ்விதமான வீடுகளில் வசிக்கிறார்கள்? 3. தேயிலை எவ்விதம் தயார் செய்யப்படுகிறது?

**பாடங்கள் 17, 18.** 1. இராஜபுதனம் எவ்விதமான நாடு? 2. இராஜபுத்திரர்களுக்கு ஒட்டகங்கள் எவ்விதம் உபயோகப்படுகின்றன? 3. இராஜபுத்திரச் சிறுவர்களுக்கு எப் பாடங்களில் பிரியம் அதிகம்?

**பாடங்கள் 19, 20.** 1. கல்கத்தாவில் என்ன தொழிற்சாலைகள் இருக்கின்றன? 2. சணல் தொழிற்சாலையில் நடைபெறும் வேலைகள் என்ன? 3. கல்கத்தாவின் சுற்றுப் புறத்தில் என்ன பயிர் அதிகம் சாகுபடியாகிறது?

**பாடங்கள் 21, 22.** 1. நமது உணவுக்கு உதவும் கீரைகள் எவை? 2. கோழிகளின் ஆகாரம் என்ன?

**பாடங்கள் 23, 24.** 1. உன் ஊரில் செய்யப்படும் சாமான்கள் எவை? 2. வீட்டில் உபயோகிக்கும் வஸ்துக்களில் உள்ளூரில் செய்யப்படாத ஐந்து வஸ்துக்களைச் சொல்லு. 3. உன் ஊரில் அல்லது பக்கத்து ஊரில் சந்தை எத்தினங்களில் கூடுகிறது? 4. சந்தையில் விற்கப்படும் சாமான்களில் சிலவற்றைச் சொல்லு.

**பாடங்கள் 25, 26** 1. அதிகமான சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எவ்விதங்களில் கொண்டுபோகிறார்கள்? 2. எஸ்கிமோ ஜனங்களும் சிவப்பு இந்தியர்களும் எவ்விதம் சாமான்களை எடுத்துச் செல்லுகிறார்கள்?

18 APR 1946

# பயிற்சிகள்

1. எஸ்கிமோக்களின் பனிக்கட்டி வீட்டைப் போல் களிமண்ணால் செய்யவும்.

2. மணலைப் பரப்பி அதில் பாலைவனச் சோலையின் காட்சியை அமைக்கவும்.

3. ஒரு பொம்மைக்கு சிவப்பு இந்தியச் சிறுவனுடைய உடைகளைப் போல உடைகளைத் தைத்துப் போடவும்.

4. நீக்ரோக்கள் வசிக்கும் பிரதேசத்தில் காணப்படும் ஒட்டைச் சிவிங்கி, வரிக் குதிரை, மான், சிங்கம், யானை முதலிய மிருகங்களின் படங்களைச் சேகரிக்கவும்.

5. பள்ளிக்கூடம் இருக்கும் ஊரிலாவது, அல்லது பக்கத்து ஊரிலாவது இருக்கும் தொழிற்சாலைக்குப் போய் அங்கு நடைபெறும் வேலைகளைக் கவனிக்கவும்.

6. இடைச் சிறுவர் உபயோகிக்கும் துரட்டியின் படம் வரையவும்.

7. கம்பு, தினை, சோளம், பருத்தி இவைகளைச் சேகரித்துப் பள்ளிக்கூடக் காட்சி சாலையில் வைக்கவும்.

8. கொச்சி செம்படவச் சிறுவனைப் போல் உடுத்திக்கொண்டு, அவன் தன் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுவது போல் சொல்லவும்.

9. அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத்தின் காட்சியை, வேண்டிய மாதிரிகளைச் செய்து கொண்டு அமைக்கவும்.

10. களிமண்ணால் காய்கள், பழங்கள், கிழங்குகள் முதலியவற்றைச் செய்யவும்.

11. நாம் உபயோகிக்கும் சாமான்களைக் கீழ்க்கண்டபடி அட்டவணை தயார் செய்யவும்.

| உள்ளூரில் கிடைக்கும் சாமான்கள் | | அயல் இடங்களிலிருந்து வரும் சாமான்கள் | |
|---|---|---|---|
| சாமான்களின் படங்கள் | சாமான்களின் பெயர்கள் | சாமான்களின் படங்கள் | சாமான்களின் பெயர்கள் |
| | | | |

12. போக்கு வரவுக்கு உபயோகப்படும் சாதனங்களின் மாதிரிகள், படங்கள் இவைகளைச் சேகரிக்கவும்.

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி—1945.

2-453